# வள்ளலார் 200




# திருவருட்பா ஒப்பித்தல் போட்டி

பிரிவுகள்

| | |
|---|---|
| அரும்பு | மழலை நிலை மாணவர்கள் (Pre-k students) |
| மொக்கு | அடிப்படை மற்றும் வகுப்பு 1 (நிலை 1) மாணவர்கள் (Kindergarten and Grade 1 Students) |
| மொட்டு | உயர் அடிப்படை நிலை (Advanced KG), வகுப்பு/நிலை 2 மாணவர்கள் (Advanced KG and Grade 2 students) |
| மலர் | வகுப்பு 3, 4,5 மாணவர்கள் (Grade 3, 4, 5 Students) |
| பூ | வகுப்பு 6, 7, 8 மாணவர்கள் (Grade 6, 7, 8 Students) |

விதிமுறைகள்

- வள்ளலார் மற்றும் பூங்கா மெய்நிகர் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்கலாம்.
- இந்தக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள பாடல்களை மட்டுமே கூற வேண்டும்.
- ஒரு மாணவர் எத்தனை பாடல்களை வேண்டுமானாலும் ஒப்பிக்கலாம். அதிகபட்சமாக 3 பாடல்களை மாணவர்கள் ஒப்பிக்கலாம்.
- ஒவ்வொரு பாடலுக்கும் ஐந்து மதிப்பெண்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| அரும்பு/ மொக்கு/ மொட்டு | செய்யுட்களை மட்டும் கூறினால் போதுமானது. |
| மலர்/பூ | செய்யுள், வள்ளலார் குறித்த சிறு குறிப்பு ஆகியவற்றைக் கூற வேண்டும். (Students must prepare their speech about Vallalar. This speech can be in Tamil or English. Talking in Tamil will get more Marks) |

மதிப்பெண்கள்:

1. சரியாகக் கூறுதல் (Correctness) - ஒவ்வொரு பாடலுக்கும் 5 மதிப்பெண்கள் வழங்கப்படும்.
2. சரளமாகக் கூறுதல் ( Fluency) - ஒவ்வொரு பாடலுக்கும் 5 மதிப்பெண்கள் வழங்கப்படும்.
3. சரியான உச்சரிப்பு (Pronunciation) - ஒவ்வொரு பாடலுக்கும் 5 மதிப்பெண்கள் வழங்கப்படும்.
4. ஆசிரியர் குறிப்பிற்கு 5 மதிப்பெண்கள் வழங்கப்படும். தமிழில் பேசினால் முழுமையாக ஐந்து மதிப்பெண்கள். ஆங்கிலத்தில் பேசினால் அதிகபட்சம் 3 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**திருவருட்பா போட்டி, டிசம்பர் 10 ஆம் தேதி விழா அரங்கில் நடைபெறும்.**

**பூங்கா மெய்நிகர் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் ஜூம் மூலமாக இணைந்து போட்டியில் பங்கேற்கலாம்**

## நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

## ஒருமையுடன் நினது...

( ஐந்தாம் திருமுறை)

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
  உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
  உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
  பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
  பிடியா திருக்கவேண்டும்.

## அக்கச்சி

(ஆறாம் திருமுறை)

வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில்குயில் ஆச்சுதடி - அக்கச்சி
மயில்குயில் ஆச்சுதடி.

துள்ளலை விட்டுத் தொடங்கினேன் மன்றாடும்
வள்ளலைக் கண்டேனடி - அக்கச்சி
வள்ளலைக் கண்டேனடி.

சாதி சமயச் சழக்கை விட்டேன் அருட்
சோதியைக் கண்டேனடி - அக்கச்சி
சோதியைக் கண்டேனடி.

பொய்யை ஒழித்துப் புறப்பட்டேன் மன்றாடும்
ஐயனைக் கண்டேனடி - அக்கச்சி
ஐயனைக் கண்டேனடி.

## வேண்டுகோள்

(ஆறாம் திருமுறை)

அப்பாநான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
  ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
  எந்தை நினதருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
  தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

## வாடிய பயிரை

(ஆறாம் திருமுறை)

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைகளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

## எத்துணையும் பேதமுறா

(ஆறாம் திருமுறை)

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்உயிர் போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம் புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர் தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்த தாலோ.

## அன்பெனும் பிடியுள்...

(ஆறாம் திருமுறை)

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் ளமைந்த பேரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

## அருள்விளக்க மாலை

(ஆறாம் திருமுறை)

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம்இடுகின்ற சிவமே
என்அரசே யான்புகலும் இசையும் அணிந்தருளே.

## திருப்பள்ளி எழுச்சி

(ஆறாம் திருமுறை)

பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்கும்
தொழுது நிற்கின்றனன் செய்பணி எல்லாம்
சொல்லுதல் வேண்டும் என் வல்லசற்குருவே
முழுதும் ஆனான்என ஆகம வேத
முறைகளெலாம் மொழிகின்ற முன்னவனே
எழுதுதல் அரியசீர் அருட்பெருஞ்சோதி
என்தந்தையே பள்ளி எழுந்தருள்வாயே.

## திருநடப் புகழ்ச்சி

(ஆறாம் திருமுறை)

பணிந்தறியேன் அன்புடனே பாடுதலும் அறியேன்
படித்தறியேன் கேட்டறியேன் பத்தியில் பூமாலை
அணிந்தறியேன் மனம்உருகக் கண்களின் நீர்பெருக
அழுதறியேன் தொழுதறியேன் அகங்காரம் சிறிதும்
தணிந்தறியேன் தயவறியேன் சத்திய வாசகமும்
தான்அறியேன் உழுந்தடித்த தடியதுபோல் இருந்தேன்
துணிந்தெனக்கும் கருணைசெய்த துரையே என் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்த சிகாமணியே.

## அருட்ஜோதி நிலை

(ஆறாம் திருமுறை)

அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளுந் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

## முறையீடு

(ஆறாம் திருமுறை)

மருந்தறியேன் மணிஅறியேன் மந்திரம் ஒன்றறியேன்
மதிஅறியேன் விதிஅறியேன் வாழ்க்கைநிலை அறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினில் ஓர்இடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறிவேனோ
இருந்ததிசை சொலஅறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும் அறிந்திலனே.

